RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s181

OPEN ACCESS

# சல்மாவின் பால்யம் சிறுகதைத் தொகுப்பில்: உம்பர்ட்டோ ஈகோவின் பாசிச உருவாக்கம்

**கா. உமாராஜ்** [அ, *]

[அ] மொழியியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா.

# Paaliyam, Salma's Short Story Collection: Fascism by Umberto Eco

**K. Umaraj** [a, *]

[a] Department of Linguistics, Madurai Kamaraj University, Madurai-625021, Tamil Nadu, India

* Corresponding Author: umarajk@gmail.com

Received: 16-07-2022
Revised: 06-10-2022
Accepted: 08-11-2022
Published: 08-12-2022

Check for updates

**ABSTRACT**

In many countries around the world, fascism is a very large political theory. This theory, which claims to save people from suffering, has often led to the destruction of people. This theory was developed in Italy by Mussolini. But the theory itself destroyed Mussolini, who is the father of fascism. However, the theory is seen in different forms in different countries, and it is seen as a theory that is sharpened on the basis of racism and religion. Thoughts about the nature of fascism have emerged in literature. Umberto Eco's novel The Name of the Rose depicts the characteristics of fascism in symbolic language. Fourteen characteristics are described by him. Terrorism, religious fundamentalism, and monogamy are the basis of fascism. Salma in her short story called Darkness, points out that such terrorism in India works with the dual nature of Hindu-Muslim. In her story she explains that each individual is a fascist.

**Keywords:** Fascism, Umberto Ego, Right-Wing Extremism, Citizenship, Right to Life

## முன்னுரை

சமூகம் தனித்து இயங்குவதில்லை. ஒவ்வொரு மனிதரும் பிறிதொரு மனிதருடன் உறவைப் பேணுதல் மூலம்தான் இயல்பாக இயங்க முடியும். சமூகத்தில் பல்வேறு இனக்குழுக்கள் பங்காற்றுகின்றன. ஒவ்வொரு இனக்குழுவும் தன்னளவில் அச்சமூகத்திற்கு இன்றியமையாததாகவே இருக்கும். ஆண், பெண் இருவரும் இணைந்தே குடும்ப அமைப்பையும் மக்களினப் பெருக்கத்திற்கான செயல்பாடுகளில் ஈடுபடவும் முடியும். ஒருவரையொருவர் விலக்குதல், வெறுத்தல் என்னும் மனிதர்க்கு அந்நியமான செயல்பாடுகள் மக்கள் தமக்குள் பிரிவினையை ஏற்படுத்துவதற்கே வழிவகுக்கும். எளிய சமூக நிலையில் மக்கள் பிரிவுகள் குறைவாகவும் எளிமையாகவும் இருந்தன. சமூகம் வளர வளர அவர்களுக்குள் பிரச்சினைகள் பல தோன்ற ஆரம்பித்துவிட்டன. இதனைச் சிக்கலான சமூகம் என்று வரையறுக்கின்றனர். இச்சமூக நிலை என்பது நவீனத் தொழில்நுட்பத்தை வரித்துக் கொண்ட சமூகமாகும். ஒவ்வொரு இனக்குழுவும் பிறரை அந்நியமாகப் பார்க்கும் நிலை இன்று தோன்றி விட்டது. முதலாளிய சமூகத்தின் அரசியல் மக்களுக்கு எதிரான ஒன்றாக மாற்றம் பெற்றிருக்கிறது. மக்களாட்சி தோன்றி வளர்ச்சி பெற்று நாடுகள் பெரும்பாலும் தமக்கான பிரதிநிதிகளை ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்று உள்ளனர். இந்த உரிமைகள், கடமைகள் என்பன ஒவ்வொரு குடிமகனுக்குமானதாகும். இந்தியச் சூழலில் சாதிய, சமய ஏற்றத் தாழ்வுகள் மிகுந்திருக்கின்றன. சிறுபான்மையின மக்கள் உயிரச்சத்துடன் வாழும் நிலை இன்று காணப்படுகிறது.

ஒருவருக்கொருவர் நட்பு பாராட்டுதலுக்குப் பதிலாக மற்றைமைகாக்கி விலக்கும் பண்பினை வளர்த்து வருகிறார்கள். இத்தகைய வெறுப்பு அரசியலே பாசிசத்தின் முக்கிய கூறாகும். இந்திய நிலைமைகள் இன்று பாசிசத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதைப் பற்றிய சிறுகதைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. இத்தாலி, ஜெர்மன் போன்ற நாடுகளில் பாசிச ஆட்சிகள் மக்களை பல்வேறு இன்னல்களுக்கும் இனப்படுகொலைக்கும் உட்படுத்தியதைப் பற்றிய உம்பர்ட்டோ ஈக்கோ நினைவில் வைக்க வேண்டியவை என்னும் கருத்தினைப் பற்றி எழுதியுள்ளார் (Rajadurai, 2018). உம்பர்ட்டோ ஈக்கோ கூறும் பாசிசத்திற்கான வரையறைகள் இன்றைய இந்திய நிலைமைகளை எடுத்துக்காட்டுவதாகக் கூறப்படுகிறது. இக்கட்டுரை அத்தகைய பாசிசத் தன்மையினை சல்மாவின் பால்யம் சிறுகதைத் தொகுப்பில் உள்ள இருண்மை என்னும் கதை சுட்டுகிறது. இந்திய அரசினால் கொண்டு வரப்பட்ட குடியுரிமைச் சட்டமானது இந்தியாவின் குடிகளில் சிலரை அந்நியமாக்குகிறது. இவ்வாறு மற்றமையை உருவாக்குதல் பாசிசத் தன்மையின் ஒரு பண்பாகும் என்பதை யூத இனவழிப்பின் மூலம் அடால்ப் ஹிட்லரால் முன்மொழியப்பட்டது. அதைப் போன்ற தன்மை இன்று காணப்படுவதை சிறுகதை முன் வைக்கிறது. இக்கட்டுரை உம்பர்ட்டோ என்னும் பிரெஞ்சு தத்துவவியலாளரின் கூற்றினை இச்சிறுகதையைக் கொண்டு நிறுவ முற்படுகிறது.

## பாசிசம்

இத்தாலியை ஆட்சி செய்த முசோலினியால் அறிமுகப்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ஆட்சி முறையே பாசிசம் ஆகும். பாசிஸ்யோ என்பது இத்தாலிச் சொல்லில் இருந்து உருவான ஒன்றாகும். பாசிஸ்யோ என்பதற்கு இறுக்கக் கட்டப்பட்ட என்று பொருளாகும். பாசிசம் என்பதற்குத் தெளிவான விளக்கம் கொடுப்பது இயலாது எனினும் ஒவ்வொரு நாட்டிலும் அதன் பொருள் குறிப்பிட்ட அரசியல் நிலைமைகளைக் குறித்து நின்றது. “பாசிஸம் அடிப்படையில் ஒரு இத்தாலிய எண்ணக் கருவாகும். இதுபொதுவாக 1922 ஆம் ஆண்டளவில் முசோலினியின் தலைமையின் கீழ் இத்தாலியில் நிறுவப்பட்ட சமூகப் பொருளாதார, அரசியலை முறைமை எனக் கூறப்படுவதுண்டு. அதே சமயம் முசோலினியினால் தலைமை துவங்கப்பட்ட அரசாங்கத்தையும் குறிக்கவும் பயன்படுகின்றது. பாசிஸம் வலதுசாரி சர்வாதிகாரம், வலதுசாரித் தீவிரவாதம் எனவும் கூறப்படுவதுண்டு.” என்ற கூற்றின் வழி அறிந்து கொள்ள முடிகிறது (Geetha, 2018). இதனை மேலும் சர்வாதிகாரக் கொள்கை என்று விளக்கம் அளிக்கினறனர். “இத்தாலியில் பாசிஸக் கொள்கையாகவும் ஜெர்மனியில் நாஸிக் கொள்கையாகவும் உருமாறித் தோன்றியது” என்று கூறப்படுகிறது (Valluvan, Fleix, 2018). பாசிஸம் மக்களை வேறுபடுத்தும் அரசியலை செய்யும் வகையிலானது என்பதை இந்தியச் சூழல்கள் உணர்த்துகின்றன என்கிறார் ஜமாலன். “இந்தியத் துணைக்கண்டம் இன்று பாசிசத்தின் உச்ச வளர்ச்சியை நோக்கி நகர்ந்து கொண்டுள்ளது. ஜெர்மானிய ஹிட்லர் தொழிற்சங்கம் வழியாக வளர்ந்து, பின்னாளில் தேசிய வெறியை ஊட்டி இனவெறியை வளர்த்து தூய ஆரிய ரத்தம் என்கிற மகா ஜெர்மானியர்கள் குறித்த கதையாடல்களைக் கட்டமைத்து பாராளுமன்றம் வழியாக ஜெர்மானிய தேசத்தைத் தனது நாஜிக் கட்சியின் வெற்றி வழியாகக் கைப்பற்றினான் என்பது உலகறிந்த வரலாறு. அவன் ஜெர்மானியர்களின் எதிர்மையாக யூதர்களைக் கட்டமைத்து அவர்களைக் கொன்றொழித்தான். அதே பாதையில் திட்டமிட்டு பல்வேறு சதிகள், சமரசங்கள், நெளிவு சுழிவுகள், இரட்டை நாக்குப் பேச்சுக்கள், ஏற்ற இறக்கங்கள் வழியாக எண்ணற்றப் பொய்கள், புனைவுகள் கட்டுக்கதைகளைக் கட்டமைத்து பரந்துபட்ட மக்களை நம்ப வைத்து இந்திய நாஜிகள் என்று சொல்லும் அளவிற்கு இன்று பா.ஜ.க என்ற கட்சியின் வழியாக.... இந்துத்துவா என்ற பெயரில் இந்தியப் பெரும்பான்மை மக்களுக்கு எதிராக முஸ்லிம்கள், கிறித்தவர்களைக் கட்டமைக்கிறது.” என்று இந்தியச் சூழலில் பாசிசம் வளர்ந்து வரும் விதத்தினைப் பற்றிக் கூறுகிறார் (Jamalan, 2018). பண்பாட்டு ரீதியில் ஒரு குறிப்பிட்ட இனத்து மக்களை தனிமைப்படுத்துதல், எதிரிகளாகக் கட்டமைத்தல் என்பன பாசிசத்தின் கூறாகக் கருதத் தக்கதாகும்.

## உம்ர்பட்டோ ஈகோ

பாசிஸம் உருவான நிலத்திலிருந்து உருவான ஒரு நாவலாசிரியர் உம்பர்டோ ஈகோ ஆவார். இவர் இத்தாலி நாட்டின் அலெக்சாண்டிரியாவில் 1932ஆம் ஆண்டு பிறந்தவர். இவர் நாவலாசிரியராக அறியப்பட்டாலும் குறியியல் அறிஞர் ஆவார். இவருடைய ரோஜாவின் பெயர் நாவல் உலகப் புகழ்பெற்றதாகும். 22ஆம் வயதில் டோமாசோ அழகியல் சிந்தனை பற்றி ஆய்வு செய்து பட்டம் பெற்றார். இவருடைய அணுக்கழிவு பற்றிய குறியியல் குறித்த சிந்தனைகள் வல்லாதிக்கப் பேரரசுகள் மூன்றாம் உலக நாடுகளை சுரண்டுவதை வெளிப்படுத்துவனவாகும். அணுக்கழிவைப் புதைத்தல் என்னும் செயல்பாடு அதன் பாதிப்புகளை பல நூற்றாண்டுகளுக்கு மக்கள் அறிந்து கொள்ள ஏதுவாக தெரியப்படுத்த வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டது. பத்தாயிரம் ஆண்டுகளுக்கு அணுக்கழிவுகள் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியன என்னும் போது ஒரு நூறாண்டுக்கு இருக்கும் மொழி அமைப்பு மாறிக் கொண்டே இருக்கிறது. பிற்காலத்தைய சமூகம் அதனை அறிந்து கொள்வதற்கு குறியீட்டை விட்டுச் செல்ல வேண்டும் என்பதே அவருடைய அணுக்கழிவு பற்றிய குறியியல் நோக்கு என நாகார்ச்சுனன் வெளிப்படுத்துகிறார்.

குறியியலை பொய்யின் கோட்பாடு என்று அழைத்தார். “அர்த்த உருவாக்கமும் தற்செயலாகவே வார்த்தைக்கும், பொருளுக்கும், உண்மைக்கும் இடையிலுள்ள இடுகுறி உறவுகளால் நிகழ்வதால் உமப்ர்ட்டோ ஈக்கோ குறியியலைப் பொய்யின் கோட்பாடு (A theory of lie)” என்று அழைத்தார். ஆனால் அர்த்தங்கள் எல்லையற்றவை; அவை தொடர்ந்து இலக்கியப் பிரதிகளிலும், தத்துவப் பிரதிகளிலும் தள்ளிப்போடப்படுகின்றன என்ற தெரிதாவின் (Derrida) கோட்பாட்டை உம்பர்ட்டோ ஈக்கோ எதிர்த்தார். ஈக்கோவின் குறியியல், அர்த்தங்களின் நழுவுதல் எப்படி நடக்கிறது, அதன் எல்லைகள் எப்படித் தீர்மானமாகின்றன என்று விளக்குகிறது.” எனக் குறிப்பதாக விளக்குகிறார். பொய்யின் கோட்பாடு என்பதை பல்வேறு துறைகளுக்கும் பொருத்திக் காணலாம்.

## உம்பர்ட்டோ ஈகோவின் பாசிச கருத்தாக்கம்

இத்தாலியின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவராக கருதப்பட்ட உம்பர்ட்டோ ஈகோவின் நாவல்கள் படிப்பதற்கு கடினமானவை என்றாலும் அதிக அளவில் விற்பனையான பட்டியலில் சுட்டப்படுகின்றன. அதில் ஒன்றுதான் ரோஜாவின் பெயர் என்பதாகும். இந்த நாவலில் அவர் கூறும் கருத்துக்கள் பாசிச அரசின் தன்மைகள் குறித்ததாக அமைகிறது. “பாசிசம் என்பது கடந்த காலத்தோடு முடிந்து விடக் கூடிய விஷயமல்ல. அது ஆதியிலிருந்தே தொடர்ந்து பல்வேறு வடிவங்களில், பல்வேறு காலகட்டங்களில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் நிகழ்வுப் போக்கு என்று எக்கோ ஏறத்தாழக் கால் நூற்றாண்டுக்கு முன்பே கூறினார். இத்தகைய பாசிசத்தின் பதினான்கு அம்சங்கள் என அவர் கூறுவனவற்றில் மிகப் பெரும் பகுதி நமது நாட்டில் இன்று நிலவும் சூழலுக்கு மிகவும் பொருத்தமானவையாக இருப்பதைப் பார்க்கலாம்” என்ற கூற்று ஈகோவின் பாசிசம் குறித்த கருத்தாக்கத்தினை வெளிப்படுத்துகிறார் (Rajadurai, 2018). அது காலந்தோறும் தொடர்ந்து கொண்டிருக்கும் ஒன்று எனவும் அது கடந்த காலத்தோடு முடிந்து விட்டதாகக் கருதக் கூடாது எனவும் குறிப்பிடுவதை எடுத்துக் காட்டுகிறார். பாசிசத்தின் பண்புகளில் தேசியவாதமும் ஒன்று. குறிப்பிட்ட குடிகளை பூர்வ குடிகளாகவும் சில சிறுபான்மைக் குடிகளை அந்நியராகவும் கட்டமைத்து தேசிய வெறியூட்டும் பண்பினை கொண்டிருக்கும் என்கிறார். “பாசிஸ்டுகளின் ஆதரவாளர்கள் தங்களது பகைவர்களின் படோடபமான செல்வம், வலிமை ஆகியவற்றைக் கண்டு அவமான உணர்ச்சி அடைபவர்களாகச் செய்யப்பட வேண்டும். ஆயினும் பகைவர்களை வெல்ல முடியும் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு ஊட்டப்பட வேண்டும். ஆகவே பாசிஸ்டுகளின் சொற்ஜாலத்தில் குவிமையம் தொடர்ந்து மாறிக் கொண்டே இருந்தாக வேண்டியுள்ளது. அதாவது பகைவர்கள் ஒரே சமயத்தில் வலுவானவர்களாகவும் வலுவற்றவர்களாகவும் இருக்கிறார்கள் என்ற எண்ணத்தை அவர்கள் மக்கள் மனங்களில் ஏற்படுத்த வேண்டும்.” என்று ஈகோவின் கருத்தாக்கத்தில் ஒன்றினைப் பற்றி விரித்துரைக்கிறார் (Rajadurai, 2018). பகைவர்கள் என்று கட்டமைக்கப்படுதல் என்பது இனம், மதம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைவதாகும். இந்து-முஸ்லீம் என்னும் பகைமை வெளி உருவாக்கப்படுவதில் ஆட்சியாளர்கள் பங்கு

வகிக்கின்றனர். மற்றமையை உருவாக்கி அவர்களை புறத்தாக்குவதன் வழியாகவே தேசிய வெறியை மக்களிடையே ஊட்ட முடியும். இதைத்தான் ஹிட்லர் யூத இனத்திற்கு எதிராக செய்தான் எனக் காணமுடிகிறது. அதே போலான வடிவத்தில் இந்தியச் சமுதாயத்தில் இந்து, முஸ்லீம் ஆகிய இரு மதத்தவரிடையே உள்ள வேறுபாட்டினை பகைமை உணர்வாக வளர்த்தெடுத்து அதன் மூலம் பாசிச ஆட்சிக்கு வித்திடுகின்றனர்.

## குடியுரிமைச் சட்டம்

இந்திய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள குடியுரிமை திருத்தச் சட்டமானது பூர்விகக் குடிகள் என்னும் அடிப்படையைக் கொண்டது. இந்துக்களைத் தவிர பிற சமயத்தினர் வெளியேறுதல் வேண்டும் என்ற அடிப்படையில் அமைவது. இதன் அடிப்படையில் "இந்தியா என்ற பாரதத்தின் ஒற்றை மதமாக இந்து மதம் முன்வைக்கப்பட்டு அதன் அடிப்படையில் இந்தியாவை இந்து ராஷ்டிரமாக மாற்றுவோம் என இந்துத்துவர்கள் தொடர்ந்து கூறி வருகிறார்கள்." என்று குறிப்பிடுகிறார் (Jamalan, 2022). இந்தச் சட்டத்தைக் குறித்து பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பினைத் தெரிவித்த பின்பும் அரசானது இதனை தன் பெரும்பான்மை பலத்தினைக் கொண்டு நிறைவேற்றத் துடிக்கிறது எனக் கூறப்படுகிறது.

## சல்மாவின் பால்யம்

எழுத்தாளர் சல்மா ரொக்கையா மாலிக் என்னும் இயற்பெயர் கொண்டவர், கவிஞராக எழுத்துலகில் அறிமுகமான இவர் இரண்டாம் ஜாமங்களின் கதை என்னும் நாவல் மூலம் அடிப்படைவாதத்தினைக் கேள்விக்குட்படுத்தி வெளிப்பட்டார். இஸ்லாமிய சமயத்தினுள்ளும் அடிப்படைவாதம் பெண்களுக்கு எதிரான கருத்தியல்கள் குறித்த கேள்விகளைத் தொடர்ந்து முன் வைப்பவராக திராவிட இயக்கச் சிந்தனையாளராக அறியப்படுகிறார். இவருடைய சமீபத்திய சிறுகதைத் தொகுப்பே பால்யம் என்பதாகும். இவர் தான் சந்தித்த அனுபவங்களின் அடிப்படையில் இதில் பத்து சிறுகதைகளை எழுதித் தொகுத்துள்ளார். இதில் உள்ள முதலாவது சிறுகதை இருண்மை என்பதாகும். குடியுரிமைத் திருத்தச்சட்டத்தை எதிர்த்து நடந்த ஷாகின் பாக் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்த இச்சிறுகதைத் தாம் இந்த மண்ணின் மைந்தர்கள் என்பதை உரக்கக் கூறும் இஸ்லாமியர்கள் பற்றி எழுதியுள்ளார். தேசிய வெறியூட்டத் தன்னிலைகளால் ஆனது இந்துத்துவ மனம். அதையும் சிறுகதையில் வெளிப்படுத்தியுள்ளார்.

## இருண்மை என்னும் சிறுகதை

போராட்டத்தில் ஈடுபடுகின்ற பெண்கள் டெல்லி ஷாகின் பாக்கிலிருந்து பயணம் செய்கிறார்கள் நால்வர் மெட்ரோ தொடர்வண்டியில் செல்கிறார்கள். நால்வரும் வெவ்வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டும். ஆஷா, நமீதா, ஹாலிதா, மம்தா ஆகியோர் பயணம் செய்கின்றனர். அந்த தொடர்வண்டியில் முஸ்லீம் தம்பதியர் பயணம் செய்கின்றனர். அவர்கள் மனதில் அச்சமும் நிச்சயமின்மையும் குடி கொண்டிருக்கும் என்று எண்ணியபடி ஹாலிதா பயணம் செய்கிறாள். ஷாகின்பாக்கில் போராட்டம் நடந்தபடியிருக்கிறது. போராட்டத்தைப் பற்றிய நினைவுகளும் கொண்டவளாக இருக்கிறாள் ஹாலிதா. அவர்கள் இறங்க வேண்டிய இடத்திற்கு வந்து இறங்கி வாடகைக் காரில் செல்கிறார்கள். இரவு நேரமாதலால் அவர்கள் தங்களுக்குள் குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிரான போராட்டம் பற்றியும் அரசு பற்றியும் பேசிக் கொண்டு வர ஓட்டுநர் மேல் சற்று ஐயம் கொண்டு பேச்சை நிறுத்திக் கொண்டனர். தேசிய வெறி யாரிடமிருந்தும் வெளிப்படலாம் என்பதாக இது சுட்டப்படுகிறது. ஹாலிதாவை நமீதாவின் கணவன் அவளுடைய வீட்டில் விட்டு வரச் சொல்வதற்காக அவனை அழைக்க அவனோ தான் எதற்காக அவளை வீட்டில் சென்று விட்டு வர வேண்டும் என்று கேட்டதோடு இஸ்லாமியப் பெண்களைத் தன் வீட்டிற்கு அனுமதித்தையே விரும்பாதவனாக சத்தமிடுகிறான். இது

தன் வீடு எனவும் தன்னிடம் அனுமதி கேட்காமல் வீட்டிற்கு வந்தது தவறென்று கத்துகின்றான் என சிறுகதை முடிவுறுகிறது.

## பாசிசத்தின் கோர முகம்

எப்பொழுதும் அரசுகள் மக்களின் குரலுக்குச் செவி சாய்ப்பதில்லை என்பதையே ஷாகின்பாக் போராட்டம் உணர்த்துகிறது என சிறுகதை பேசுகிறது. இரவில் பெண்கள் டில்லியில் பாதுகாப்பாக இருக்க முடியாது என்ற குரல்களும் கேட்கின்றன. இத்தகைய பாதுகாப்பற்றத் தன்மையினை சிறுபான்மையினரும் தற்போது சந்தித்து வருகின்றனர் என்பதையே சிறுகதை உணர்த்துகிறது. போராட்டம் இரண்டு மாதங்களுக்கும் மேல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அரசு செவி சாய்ப்பதோ, கண்டு கொள்வதோ இல்லை என்று தங்களுக்குள் பேசிக் கொள்ளவும் அச்சம் கொண்டவர்களாக இருப்பதைக் காணமுடிகிறது. "இந்த அரசு எதையாவது பொருட்படுத்துகிறதா என்ன? இப்படிப்பட்ட அரசும் இப்படி ஒரு பிரதரும் இனி எக்காலத்திலும் வாய்க்க கூடாது தங்களது மலிவான சித்தாந்தத்திறாக எத்தனை மோசமாக நடந்து கொள்கிறார்கள் பாசிஸ்ட்ஸ். ஆஷாவின் வார்த்தையில் அனல் பறந்தது. ஹாலிதா சட்டென அவளது உள்ளங்கையைப் பிடித்து அழுத்தி டிரைவரைக் கண் ஜாடையில் காட்டினாள். ஆஷாவின் குரல் அப்படியே அமுங்கிற்று" என்னும் பகுதி மக்கள் எவ்வாறு அச்சமுற்று வாழ நேர்ந்திருக்கிறது என்பதைச் சுட்டுகிறது (Salma, 2022). குரல் அமுங்கிற்று எனக் கூறும் போது குரல் வளைகள் நெறிக்கப்படும் ஒரு சமூகத்தில் வாழ்வது கடினமான நிலை சுட்டப்படுகிறது. போராட்ட பந்தலில் குவிந்திருப்பவர்கள் தங்கள் வாழ்வுரிமை பறிக்கப்படுவதை எதிர்த்துக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர் "நாங்கள் இந்த நாட்டின் பிரஜைகள் எங்களை இங்கிருந்து வெளியேற்ற நீங்கள் நினைத்தால் அது எப்போதும் நடக்காது. இது என் தாத்தா பிறந்த மண். என் தந்தை, என் தாயார் இன்னும் எங்களது முன்னோர்கள் வாழ்ந்த மண்" என்று குறிப்பிடுவதன் மூலம் மற்றமையாக்கப்பட்டதன் வலியை வெளிப்படுத்தும் நிலை கூறப்படுகிறது (Salma, 2022). பெண்கள் அதிலும் சிறுபான்மையினப் பெண்களின் மனதிலிருந்து தம் குடியுரிமைப் பறிக்கப்படுமோ என்னும் அச்சம் கலந்து பேசுவதைக் காணமுடிகிறது. சிறுபான்மையினரான இஸ்லாமியர் தங்கள் வாழும் உரிமை பாதிக்கப்படுவதைப் பற்றி எதிர்க் குரல் எழுப்புகின்றனர். சர்வாதிகார ஆட்சி நிலவும் சூழலில் இது போன்று இனவாதத்தின் அடிப்படையில் மற்றமையாக்கப்படும் இனக்குழுக்கள் ஒடுக்குதலுக்கு உள்ளாவதும் அழித்தொழிக்கப்படுதலும் உலகில் பல நாடுகளில் நடைபெற்று வருகின்றன. இஸ்லாமியர்களைப் போல பாலஸ்தீனும் இத்தகைய பிரச்சினைகள் இருக்கின்றன. பாசிசத் தன்மையிலான இத்தகைய மனப் போக்குகள் அரசுகளில் நிலவும் போது குறிப்பிட்ட பகுதி மக்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

இருண்மை சிறுகதையில் நமீதாவின் வீட்டிற்கு வரும் ஹாலிதா மற்றும் ஆஷா ஆகியோரை வீட்டிற்குள் அனுமதித்ததற்காக நமீதாவின் கணவர் சினம் கொள்கிறார். அவருடைய மனநிலையானது பாசிசத் தன்மையில் வெளிப்படுகிறது. வீடு தன்னுடையது என்றும் தன்னை அனுமதி கேட்டுத்தான் விருந்தினராக யாரையும் அனுமதிக்க வேண்டும் என்றும் கூறுகின்றான். இத்தகைய கூற்று தனது நாடு, தனது நிலம் என்னும் பாசிசத் தன்மைக்கு வித்திடும் வகையிலானது என்பதையே சிறுகதையில் சுட்டியுள்ளார் ஆசிரியர். ஒவ்வொரு மனிதருக்குள்ளும் பாசிசத் தன்மை ஒளிந்து கிடக்கிறது. அதை தூண்டும் வகையிலான ஆட்சி அதிகாரத்தினர் பெரும் அழிவுகளை ஏற்படுத்துகின்றனர். அதன் சாட்சியாகவே இந்தியா போன்ற நாடுகளில் இனவாதத்தின் அடிப்படையிலான சிந்தனைகள் கூர் தீட்டப்படுகின்றன. இரு இன மக்களை எதிரெதிர் துருவங்களில் நிறுத்தி தம் அரசியல் நிலையை உறுதிப்படுத்திக் கொள்கின்றனர். உம்பர்டோ ஈகோவின் பாசிசத்தின் அம்சங்களில் ஒன்றான வலதுசாரித் தீவிரவாதத்தினை குறிப்பிடுவதாகவே இருண்மை என்னும் சிறுகதையினை எழுதியுள்ளார் சல்மா என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

## முடிவுரை

பாசிசம் என்பது மக்களை பிளவுபடுத்தி ஒரு பகுதியினர்தம்மை மேலோராகக் கட்டமைத்துக் கொண்டு பிற மக்களை அழித்தொழிக்கும் வகையிலானது. இதன் பண்புகளைப் பற்றியே உம்பர்ட்டோ ஈகோ தனது நாவலான ரோஜாவின் பெயர் என்பதில் குறிப்பிட்டுள்ளார். குறியீட்டுச் சிந்தனையாளராக ஈக்கோ புகழ்பெற்ற நாவல்களை எழுதியுள்ளார் எனினும் அவரது நாவல்கள் எளிதில் புரியும்படி அமைவன அல்ல என்றும் கூறப்படுகின்றன. அவருடைய சிந்தனைகள் அதாவது பாசிசம் பற்றிய சிந்தனைகள் இந்தியச் சூழலில் பொருந்திப் போவதைப் பற்றி ராஜதுரை எடுத்துக்காட்டுகிறார். சல்மாவின் பால்யம் என்னும் சிறுகதைத் தொகுப்பில் உள்ள இருண்மை என்னும் சிறுகதை பாசிசம் இந்தியாவில் பரவி வருவதைப் பற்றி எடுத்துரைப்பது. உம்பர்ட்டோ ஈக்கோவின் கருத்தியல் அடிப்படையில் இச்சிறுகதை சிறுபான்மையினரை மற்றமையாக்கி அவர்களை எதிரிகளாகச் சித்தரிக்கும் அரசாட்சியின் தன்மையினைத் தோலுரித்துக் காட்டுகிறது.

## References

Geetha Pongalan, (1993) Arasaariviyal Arimugam, CVR Printers, Chenai, India.

Jamalan, (2022) Kudiyanmaich samugamum Nunpasisamum, Bharathi Puthagaalayam, Chennai, India.

Nagarjunan, (2008) Nalir, Aali Pathippagam, Chennai, India.

Rajadurai, S. (2018) Marxin Kottum Adakukadaikalum, New Century Book House, Chennai, India.

Salma, (2022) Paalyam, Kalachuvadu Pathippagam, Chennai, India.

Vallivan, Felix, (2019) Arasanganthin Varalaru, Tamilnadu Padanool Kazhagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License